**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

O.S.No.939/2023 Date :25.11.2025

பெயர் : நாகராஜன் வாசா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது ஆவணங்கள் உடன் இணைத்து தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டா அடங்கல் மற்றும் தாவாசொத்தின் புலவரைபடம் மற்றும் தாவாசொத்தின் பட்டா ஆகியவை நான் தாக்கல் செய்த ஆவணங்களா என்றால் நான் தான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த அடங்கல் பதிவேட்டில் தலைப்பில் செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டம் என்றும் அதற்கு அடுத்து கீழ் உள்ள ஆவணத்தில் தாம்பரம் வட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் என்றும் குறிப்பிடப்பட்ட நிலையில் மேற்படி ஆவணம்

என்னால் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. எவ்வளவு நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளீர் என்றால் 64 சென்ட் நிலத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா புல எண்ணில் மொத்தமாக எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றால் 10 ஏக்கர் மற்றும் சொச்சம் விஸ்தீரணம் இருந்தது. நாங்கள் 64 சென்ட் நிலத்திற்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் இவ் வழக்கில் தாக்கல் செய்த ம.சா.ஆ.3 ஆவணமான பட்டாவில் தலைமை இடத்து துணை வட்டாட்சியர் சைதாப்பேட்டை என குறிப்பிட்டுள்ள பதவியிடமானது 1978 ஆம் ஆண்டு அரசாணையின்படி மேற்படி பதவி நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்றாலும் ஆனால் 1986 ஆம் ஆண்டு நீக்கம் செய்யப்பட்ட பதவியில் இருக்கும் வட்டாட்சியர் என குறிப்பிட்டு முத்திரை பதித்து கையொப்பம் பெற்றுள்ளது மேற்படி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. அந்த ஆண்டு தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு வெங்கட்ராம ஐயர் என்பவர் ஏற்படுத்திக் கொடுத்த தான பத்திரத்தில் சங்கத்தின் பெயரில் தானம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

ஊர் மக்களுக்காக அந்த ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி இடமானது வெங்கட்ராம அய்யர் என்பவர் நாங்கள் மேற்படி வெங்கட்ராமன் ஐயருக்கு எங்களுக்கு பாத்தியமான மற்றொரு சொத்தை பரிவர்த்தனை மூலம் கொடுத்தவரின் அடிப்படையில் அந்த தாவாசொத்தை எங்களுக்கு பரிவர்த்தனை மூலம் வெங்கட்ராம ஐயர் கொடுத்துள்ளார். பூந்தமல்லி நீதிமன்றத்தில் தாவா சொத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்த சங்கம் வேறு என்றாலும் தற்போது தாவா சொத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ள சங்கம் வேறு என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த சங்கம் காலாவதி ஆகிவிட்டதால் புதிய சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எங்களது ஊர் முன்னோர்கள் மேற்படி முதலில் சங்கத்தை வைத்திருந்தார்கள். அதன் பின்னிட்டு அவர்கள் அந்த சங்கத்தை புதுப்பிக்கவில்லை.

அரசுக்கு சொந்தமான சொத்தை சங்கத்தின் பெயர் மூலமாக அபகரிக்க வேண்டும் என்பதற்காக தவறான ஆவணங்களை உற்பத்தி செய்து இவ் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் ஆவணங்கள் உள்ளது. தாவா வழக்கு என்னால் ஜோடிக்கப்பட்டு தாவாசத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.